The Village Panchayat Journal.

VOL. V] JULY, 1942. [No. 4.

The Editorial Committee do not hold themselves responsible for views expressed by contributors. Contributors are requested to write legibly and on one side of the paper. Manuscripts will not be returned unless stamps are sent to cover postage. Matter intended for the issue of any particular month should reach the Committee before the 15th of the previous month.

Repairs to Porombokes—No need to obtain transfer—before making improvements.

We, understand that the Government have, passed orders, modifying their previous orders that Panchayats can incur expenditure for repairs of Porombokes—without getting actual transfer from the Revenue Department. We hope to publish the order in the next issue. This is good so far as it goes. Still Panchayats should be vested with the control of all the Communal Property admits of no doubt and we hope the forthcoming legislation will set right this anamoly.

Plough for Victory and grow more food.

The Indian nation is being urged to plough for victory and grow more food. This has been the cry raised from every platform and by every public speaker from Governors to Congress leaders and workers. Governments in provinces have announced concession after concession to such as would take advantage and help in pushing forward the area of cultivation of food crops. The latest orders of the Government of Madras are G.O. No. Mis. 1167 dated 20th & G.O. No. Mis. 1207, dated the 28th of May 1942. By the one the Government relax restrictions earlier imposed on assignment and permit the cultivation, free of assessment, of food grains including paddy in fasli 1351, 1352, 1353 on any unoccupied land of certain new descriptions in addition to porambokes and the like contained in earlier orders on the subject. Hereby (i) lands adjoining reserved forests or unreserved block of a square mile or more (ii) lands within a belt of two or three chains from the forest reserve boundary and (iii) land which is in a compact block (except in Mettur and under Cauvery) are thrown open.

Previous permission has, however, to be obtained to take water from Irrigation sources where such permission has to be obtained under the present rules. Where lands of the above descriptions are already occupied no eviction proceedings will now be taken. Cultivation will be permitted during fasli 1351 to 1353. This order further directs that land in category number (iii) should be preferably given to the landless poor. The second order refers to tankbed lands. In the case of Public works tanks the Executive Engineer should be asked to say at once which public works department tanks or portions thereof should not be cultivated. The Collector should forthwith pass orders agreeing or disagreeing with the Executive Engineer. To distribute tankbed lands the Tahsildar or Revenue Inspector should visit the village after giving previous intimation, make a list of all applications written or oral, with the help of the village officers and influential villagers, make an equitable allotment of tankbed lands on the spot preference being given to Ayacutdars growing (1) vegetables and next (2) dry crops and to non-Ayacutdars likewise, equal extents being given as far as possible. In the case of tankbeds of small tanks with less than 20 acres of Ayacut the allotment may be left to the village headman. What may be grown in these lands is also specified in this order. Crops like cholam which are uprooted, not merely cut, and vegetables may be grown free of charge. These orders read with earlier orders, including the order waiving assessment for raising of crops to the limit of 25 cents in private compounds are good so far as they go, though some of these like the order relating to lands in the vicinity of forests do require further elucidation to avoid trouble from the lower officials of the forest department for the ryot. But there are a number of points which, if not attended to would make these orders fairly paper orders. We are already in July and even knowledge of orders passed at the end of May may not be available to the villager before it is too late for him to begin cultivation. The Government have no doubt called upon Collectors to give wide publicity but this leads us not very far. Even at this stage, it is to be regretted that constituted bodies in villages like the Panchayats and Co-operative Societies are not utilised. If every village had a Panchayat and groups of villages had joint committees, these orders would have automatically reached the villager. Even as they are, weakly organized and more weakly empowered and equipped, we make an earnest appeal to Presidents of Panchayats and Panchayatdars to broadcast news about these concessions to the best of their abilities and co-operate with the officials charged with the duties in this behalf to make the best use of the situation. Apart from the news reaching the ryots concerned, may we ask the Government to plan in every village, through their village officers and such non-official bodies as exist in the villages, for the full utilisation of these concessions immediately,

What time visits of Tahsildars and Revenue Inspectors will take is a matter about which we are not sure. The next matter of importance, in so far as Paddy cultivation is concerned, and that is the most necessary food crop, the supply of water has to be as full and as prompt as possible. With some direct knowledge, we are in a position to state that when water was flowing over the Godavari aniout and there was no dearth of it, water was not allowed to be used for raising seed-beds. As a matter of fact it may be very useful if central seed beds could be organised and seedlings supplied to small plots that come under the plough as a consequence of concessions now offered. When on this point, we beg to be excused if we make a digression and refer to a new source of water readily available in sufficient quantities for at least one crop. Long and continuous trenches of water exist on both sides of Railway embankments on account of material quarried for the railways. This water and the dug outs all belong to the Central Government of India. If permission is speedily got from them and the ryots in adjoining dry lands permitted to make use of the water for raising paddy, a great deal may be added to our stock. There is yet another point that deserves careful consideration. The Indian ryot in general is too poor to make an investment when even such concessions are made. The Government has long intended provision for co-operative loans under ordinary conditions to meet the ryots current expenses. It is essential therefore that there should be immediate collaboration and co-ordination of effort between the departments concerned—the revenue, the Co-operative, the Forest, the Public Works and Agricultural. Here, again, this collaboration and co-operation centralised somewhere at the district or division headquarters, would be collaboration and co-ordination on paper. It has to be worked out in the villages. The best instrument for it is really the village Panchayat. Where Panchayats are in existence we hope both the Panchayats and the Government departments will realise that, by their joint effort, they can achieve the best for the villages and carry forward.

கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை.

Vol. 5	ஜூலை, 1942.	No. 4

நிருபர்கள் எழுதும் அபிப்பிராயங்களுக்கு எடிட்டோரியல் கமிட்டி ஜவாப்தாரி ஆகிறதில்லை. இந்தப் பத்திரிகைக்கு எழுதுகிறவர்கள் தெளிவாக காகிதத்தில் ஒரே பக்கம் எழுத வேண்டியது. தபாற்செலவுக்கு வேண்டிய ஸ்டாம்புகள் அனுப்பினாலன்றிக் கையெழுத்துப் பிரதிகளைத் திருப்பியனுப்பமுடியாது. எந்த மாதத்தின் சஞ்சிகைக்காக வியாஸம் அனுப்பப்படுகிறதோ அதற்கு முன்மாதத்தில் 15-ந் தேதிக்குள்ளாக அனுப்பவேண்டும்

தலையங்கம்.

போரம்போக்குகள் சீர்திருத்தம்—முன்னதாக மாற்றிக்கோள்ளுவது அவசியமில்லை.

ரெவினியூ இலாகாவிட மிருந்து முன்னதாக மாற்றுதல் பெற்றுக் கொண்டுதான் பொரம்போக்குகளை ரிபேர் செய்யலாம் என்றிருந்த உத்திரவை கவர்மெண்டார் வாபஸ் செய்து விட்டார்கள் என அறிகிறோம். அந்த உத்திரவை அடுத்த இதழில் பிரசுரிக்கிறோம். இது நல்லதுதான். ஆனால் பஞ்சாயத்துகளிடம் எல்லா பொது சொத்தும் ஒப்படைக்கப்பட வேண்டும். இதைக்குறித்து சீக்கிரம் சட்டம் ஏற்படும் என நம்புகிறோம்.

வெற்றிக்கு உழுது அதிக ஆகாரத்தை உற்பத்தி செய்யுங்கள்.

வெற்றிக்கு உழுது அதிக ஆகாரம் உற்பத்தி செய்யும்படி நமது தேசத்தில் தூண்டப்படுகிறது. எல்லா தலைவர்களும், மாகாண கவர்னர்கள் முதற்கொண்டு சாதாரண தேசத்தொண்டர் வரையில் எவ்விடத்திலும் இந்த கோஷத்தையே செய்கிறார்கள். ஆகார பயிர்கள் செய்ய விரும்பும் ஜனங்களுக்கு பலவிதமான சலுகைகள் காட்டப்படும் என்று எல்லா கவர்மெண்டாரும் விளம்பரப்படுத்துகிறார்கள். சென்னை கவர்மெண்டார் 1942 வருஷம் மே மாதம் 20ம் தேதி ஜி. ஓ. 1167ம், மே மாதம் 28ம் தேதி

ஜி. ஓ. 1207ல் கடைசியாக இது விஷயமாய் உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள். முதல் உத்திரவினால், 1351, 1352, 1353 பசலிகளில் பிரத்தியேக தீர்வையன்னியில் சில புதிய வகையான சாகுபடி செய்யப்படாத நிலங்களை, புரம்போக்குகள் முதலியவைகள் தவிர, சாகுபடி செய்ய அனுமதித்திருக்கிறார்கள். இதனால் (1) கவர்மெண்டு காடுகளுக்கு அடுத்திருக்கும் ஒரு சதுர மைலாவது அதற்கு மேலாவது விஸ்தீரணமுள்ள நிலங்களும், (2) காட்டு எல்லையிலிருந்து 2, 3 சங்கலி அளவு பரப்பத்திற்குள் இருக்கும் நிலங்களும், (3) மேட்டூர், காவேரி நீர்பாசனத்திலடங்கினது தவிர மற்ற ஒரே சதுரமான நிலவெளிகளும் சாகுபடி செய்யப்படலாம். ஆனால் இப்போதிருக்கும் விதிகளின்படி ஜலாதாரங்களிலிருந்து சாகுபடிக்கு ஜலம் எடுக்க அனுமதி கேட்கவேண்டியிருக்கும் இடங்களில் முன்னதாக மனு செய்து அனுமதி பெறவேண்டும். மேல் குறிக்கப்பட்ட நிலங்களில் குடிகள் ஏற்கனவே சாகுபடி செய்திருந்தால், அவர்களை அப்புறப்படுத்த ஒரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது. 1351 முதல் 1353 பசலி வரையில் சாகுபடி செய்யலாம். மேலே மூன்றாவது ஐட்டத்தில் சொன்ன நிலங்களை சொந்த நிலமற்று பயிர் செய்யும் குடிகளுக்கு கொடுக்கும்படி உத்திரவு செய்திருக்கிறார்கள். இரண்டாவது உத்திரவு ஏரி கரைகளில் இருக்கும் நிலங்களைக் குறிக்கிறது. பொது மராமத்து ஏரிகள் விஷயத்தில், எந்த இலாகா ஏரி நிலம் அல்லது நிலத்தின் பாகம் சாகுபடி செய்யக்கூடாது என்று எக்ஸிகியூடிவ் இஞ்சினீயரை குறிப்பிடும்படி சொல்லவேண்டும்.

மேற்படி இஞ்சினீயர் செய்யும் உத்திரவின் பேரில் ஜில்லா கலெக்டர் அதை ஆமோதித்தாவது அல்லது ரத்து செய்தாவது உடனே தீர்பளிப்பார். ஏரிகரை நிலங்களை பங்கிட்டு கொடுக்க முன்னெச்சரிக்கை கொடுத்துவிட்டு தாசில்தாராவது, ரெவினியூ இன்ஸ்பெக்டராவது கிராமத்திற்கு போகவேண்டும். நிலங்களுக்கு எழுத்து மூலமாகவும், வாசாவாகவும் மனு செய்திருக்கும் குடிகளின் ஜாப்தாவிலிருந்து, கிராம உத்தியோகஸ்தர்கள், ஊரில் செல்வாக்குள்ளவர்கள் இவர்களின் உதவிகொண்டு நியாயமான பங்கு அவ்விடமே போட்டுவிடவேண்டும். அதில் முதலாவது காய்கறிகள் பயிர் செய்யும் ஆயக்கத்தார்களுக்கும், இரண்டாவதாக புஞ்சை பயிர் செய்யும் ஆயக்கத்தார்களுக்கும் சலுகை காட்டி, பின்னிட்டு அதேமாதிரி ஆயக்கத்தார் இல்லாதவர்களுக்கும் கொடுக்கவேண்டும். கூடியவரையில் எல்லாருக்கும் சரிசமானமான பாகம் கொடுக்கப்படவேண்டும். 20 ஏகராக்களுக்குள் அடங்கின ஆயக்கத்துகளையுடைய சிறிய ஏரிகரையிலுள்ள நிலங்களை கிராம அதிகாரியே கொடுக்கலாம். என்ன பயிர் செய்யவேண்டும் என்பதும், உத்திரவில் குறிக்கப்பட்டிருக்கிறது. வேருடன் பிடுங்கக்கூடிய சோளம் முதலிய தான்யங்களும், காய்கறிகளும் இலவசமாக பயிர் செய்யப்படலாம். இந்த உத்திரவுகளும் இதற்கு முன் பிறப்பித்த உத்திரவுகளும், வீட்டுத் தோட்டத்தில் 25 சென்டு நிலங்கள் இலவசமாக பயிர்

செய்யலாம் என்பது உள்பட, மிக்க நன்மை தருகின்றன. ஆனால் கவர்மெண்டு காட்டுக்கு சமீபமாகவுள்ள நிலங்களைப்பற்றியும் இன்னும் இம் மாதிரியான சில உத்திரவுகள் குடியானவனுக்கும் உள்ளூர் காட்டு இலாகா அதிகாரிகளுக்கும் தகராறு ஏற்படாமல் வேலை செய்ய, இன்னும் கொஞ்சம் தெளிவாக்கப்படவேண்டும். உத்திரவுகள் வெறும் பேச்சளவில் மாத்திரம் பிரயோஜனமில்லை என்று ஏற்பட அநேக விஷயங்கள் கவனிக்கப்படவேண்டும். இப்போது நடப்பது ஜூன் மாதம். மே மாதம் கடைசியில் பிறப்பித்த உத்திரவுகள் குடியானவனுக்கு எட்டுவதற்குள், சாகுபடி காலம் கழிந்துவிடலாம். கவர்மெண்டார் கலெக்டர்களுக்கும் நன்றாக விளம்பரம் செய்யும்படி உத்திரவு செய்திருக்கிறார்கள். ஆனால் இது போதாது. இப்போதும்கூட கிராமங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பஞ்சாயத்துகள் கோவாபரேடிவ் சங்கங்கள், இவைகளின் உதவியை ஏற்றுக்கொள்ளாதிருப்பது வருந்தத்தக்கது. ஒவ்வொரு கிராமத்திற்கு ஒரு பஞ்சாயத்தும், கூட்ட கிராமங்களுக்கு கூட்டுக்கமிட்டிகளும் ஏற்பட்டால், இந்த உத்திரவுகள் தானாகவே ஒவ்வொரு கிராமவாசிக்கும் எட்டும். ஆயினும், பலமற்று, சக்தியற்று இருப்பினும்கூட எல்லா பஞ்சாயத்து தலைவர்களையும், பஞ்சாயத்தார்களையும் இந்த சலுகைகளைக் குறித்து எல்லாவிடங்களிலும் பரவச் செய்து, அதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் அதிகாரிகளுடன் ஒத்துழைத்து தங்களாலான சகாயத்தை செய்யும்படி விண்ணப்பித்துக் கொள்ளுகிறோம். விளம்பரப்படுத்துவது தவிர, கவர்மெண்டாரை ஒவ்வொரு கிராமத்திலும் உடனே இந்த சலுகைகளை பயன்படுத்தி ஒரு திட்டம் கிராம அதிகாரிகளும் பொது ஸ்தாபனங்களுடைய உதவியுடன் உடனே தயார் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தாசில்தார்களும், ரெவினியூ இன்ஸ்பெக்டர்களும் போய் பார்த்துவர எவ்வளவு காலம் பிடிக்கும் என்பது நமக்கு நிச்சயமாக சொல்ல முடியாது.

அடுத்தபடியாக நெல் பயிரைப்பற்றி முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயமென்னவென்றால், ஜலவசதிகள் பூரணமாகவும், தாமதமன்றியும் ஏற்படவேண்டும். கோதாவரி அணைகட்டுமேல் ஜலம் போய்க்கொண்டிருந்து, ஜலத்திற்கு குறைவேயில்லாதிருந்தபோதும் விதைபாத்திகளுக்கு அந்த ஜலத்தை உபயோகிப்பதை தடுத்தார்கள் என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். உண்மையில், மத்தி விதைபாத்திகள் பயிர்செய்து, சலுகை காரணமாக பயிராக்கப்படும் சிறிய நிலங்களுக்கு விதைகள் கொடுக்கலாம்.

இந்த சந்தர்ப்பத்தில் நாம் ஒரு விஷயத்தைபற்றி குறிப்பிட வேண்டும். அது ஒரு போகத்திற்காவது தாராளமாக உபயோகப்படும் சௌகரியமாக கிடைக்கக்கூடிய ஜலவசதியைப்பற்றி குறிப்பிடுகிறோம். ரயில்வேக்களுக்காக தோண்டியெடுக்கப்பட்டதினால் ஏற்பட்ட இரண்டுபக்க பள்ளங்களிலும் தண்ணீர் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. இந்த ரயில்வே பூமியும் பள்ளங்களும் மத்திய கவர்மெண்டாருக்குச் சொந்தம். அந்த கவர்மெண்டி

லிருந்து உடனே அனுமதி பெற்று அக்கம் பக்கமிருக்கும் புஞ்சை நில குடிகளை இந்த ஜலத்தை உபயோகப்படுத்தி நெல் பயிர் செய்யும்படி அனுமதி கொடுத்தால், அதிகமான தான்யம் கூடிவரும். மற்றொரு விஷயத்தை கவனிக்க வேண்டும். இந்திய குடியானவன் மிக்க எளியவன். கவர்மெண்டார் குடியானவனுடைய சிலவுகளுக்கு சாதாரண ஆலங்களில் கோவாபரேடிவ் கடன்கள் கொடுக்க ரொம்ப நாளாக உத்தேசித்து வருகிறார்கள். தற்சமயம் எல்லா இலாகாக்களும், அ. து. ரெவினியூ, கோவாபரேடிவ், காட்டிலாகா, பொது மராமத்து இலாகா, விவசாய இலாகா—எல்லாம் ஒத்துழைத்து ஒன்று சேர்ந்து நடவடிக்கைகள் உடனே எடுக்க வேண்டும். ஆனால் அப்படிப்பட்ட ஒத்துழைப்பு ஜில்லா ஆபீசில் உண்டாக வேண்டும் என்று வீணாய் எதிர்பார்க்காமல், கிராமங்களில் எல்லாம் ஏற்பட செய்யவேண்டும். அதற்கு ஏற்றது கிராம பஞ்சாயத்துதான். பஞ்சாயத்துகள் இருக்கும் இடங்களில், அவைகளும், கவர்மெண்டு இலாகாக்களும் ஒத்துழைத்து பிரயாசப்பட்டால், கிராமங்களுக்கு மிக்க நன்மை செய்து முன்னேறலாம் என திடமாக நம்புகிறோம்.

கிராம சீர்திருத்தம்.

R. காலேடி, M.A., I.C.S.

தொடர்ச்சி.

2-வது பாகம்.

குறிப்பிட்ட கிராமங்களின் நிலமைகளை ஆராய்தல்.

ஒரு கிராமத்தை சீர்திருத்தும் முன்பு ஒருவருக்கு அந்த கிராமத்தை மிகவும் நன்றாக தெரிந்திருக்க வேண்டும். தன் சுற்றத்தாரை சகாயம் செய்யவேண்டும் என்ற உத்சாகமும், சாமர்த்தியமும் உள்ள ஊழியர்கள் கிடைக்கக்கூடிய இடத்தை சீர்திருத்தத்திற்கு பிரதான ஸ்தலமாக வைத்து எப்போதும் ஆரம்பிக்கவேண்டும். சீர்திருத்தப்படவேண்டிய கிராமமானது இந்த மத்திய இடத்திற்கு சமீபமாக இருக்கவேண்டும். அப்போதுதான் ஊழியர்கள் அவ்விடம் அடிக்கடி போய் பார்வையிட முடியும். செய்யும் முயற்சிகள் வீணாகாமல், தகுந்த பலனைத் தரக்கூடியதக்க சுபாவமுள்ள ஜனங்கள் இருக்கவேண்டும். ஏற்கனவே அவ்விடம் ஏதாவது ஐக்கிய நடவடிக்கைகள் இருக்குமானால், அது மிக்க அனுகூலமானதுதான்.

தீவிரமாக ஆராய்ச்சி செய்யவேண்டும். எங்கெங்கு சாத்தியமோ அங்கெல்லாம் வீடுவீடாக தீர விசாரித்து விவரங்கள் சேகரிக்க வேண்டும். ஊரிலுள்ள எல்லா வீடுகளையும் கணக்கெடுத்து, ஒவ்வொரு ஊழியருக்கும் பங்கிட்டு ஒப்புவிக்க வேண்டும்.

கிராமத்தார்களுக்கு சாதாரணமாய் சரியான விவரமோ, ரூபாய் கணக்கோ சொல்லத் தெரியாது. ஆகையால் அந்தப் பிழைகளுக்கெல்லாம் சரிசெய்து சரி

யான விவரங்களை சேர்த்து வைத்துக்கொள்ளவேண்டும். சேகரித்த விவரங்களை அடியில் குறிப்பிட்ட பிரகாரம் பதிவு செய்துக்கொள்ள வேண்டும்.

1-வது பக்கம்.

வீட்டுக்காரர் பெயர்	ஜாதி	வீட்டில் மொத்தம் பெரியவர்கள்	சிறியவர்கள்	படிக்கத் தெரிந்த பெரியவர்கள்	பள்ளிக்கூடம் போகும் சிறியவர்கள்
(1)	(2)	(3-a)	(3-b)	(4-a)	(4-b)

2-வது பக்கம்.

வீடு			பூமி சவர்மெண்டு		இனாம்		
அதன் மதிப்பு	இருக்கும் அறைகள்	ஜன்னல்கள்	நஞ்சை	புஞ்சை	நஞ்சை	புஞ்சை	மதிப்பு
(5-a)	(5-b)	(5-c)	(6-a)	(6-b)	(6-c)	(6-d)	(7)

3-வது பக்கம்.

கால் நடைகள் எண்ணிக்கை					கால் நடைகள் மதிப்பு				
எருதுகள்	பசுக்கள்	எருமைகள்	பால் கொடுக்கும் எருமைகள்	வெள்ளாடு செம்மறி ஆடு	எருதுகள்	பசு	எருமை	ஆடுகள்	பால் கொடுக்கும் எருமை
(8-a)	(8-b)	(8-c)	(8-d)	(8-e)	(9-a)	(9-b)	(9-c)	(9-d)	(9-e)

4-வது பக்கம்.

மற்ற இருப்புக்களின் மதிப்பு				கடன்கள்			
மர சாமான்கள் ஆயுதங்கள் முதலியன	நகைகள்	கொடுத்திருக்கும் கடன்கள்	மொத்த மதிப்பு	அடமானம்	அடகு பேரில்	வெண்ணிலே	மொத்த கடன்
(10-a)	(10-b)	(10-c)	11	(12-a)	(12-b)	(12-c)	13

5-வது பக்கம்.

மாசூல் விவரம்

நெல்	கேவறு	கரும்பு	சஜ்ஜா	ஜொன்னு	கடலை	மற்றவை	மாசூல் மொத்த மதிப்பு	இதர வருமானம்
(14-a)	(14-b)	(14-c)	(14-d)	(14-e)	(14-f)	(14-g)	(15)	16

6-வது பக்கம்.

விவசாய செலவுகள்

கால் நடை	ஆள் கூலி	விதை	எருவு	மற்ற செலவு	நிலகுடைக் கூலி.	தீர்வை	கடன் வட்டி
(17-a)	(17-b)	(17-c)	(17-d)	17-e)	(18)	(19)	(20)

7-வது பக்கம்.

வீட்டு செலவுகள்

ஆகாரம் தான்யம்	பால் அது சம்பந்தப்பட்டது	பருப்புகள்	மிளகு, கடுகு வகை	துணி மணி	விசேஷங்கள்	இதர செலவுகள்	மொத்த வருமானம்	மொத்த செலவு
(21-a)	(21-b)	(21-c)	(21-d)	(21-e)	(21-f)	(21-g)	(22)	(23)

இந்தப்படி கணக்கு தயாரித்து, சராசரி ஒவ்வொரு ஜாதியினிடம் தலைக்கு இவ்வளவு ஏற்படுகிறது என்ற விவரத்தை தெரிந்துக்கொள்ளலாம். உதாரணமாக, உடைத்தாயிருக்கும் நில விஸ்தீரணத்தை யொட்டி குடும்பங்களை பிரிக்கலாம், அ. து. நிலமே இல்லாதவர்கள், ஒரு ஏகராவுக்குக் குறைவாக உடையவர்கள், 3 ஏகராவக்குக் குறைவாக உடையவர்கள், 5க்குக் குறைவு, 10க்குக் குறைவு இப்படி. (சௌகர்யத்திற்காக 3 ஏகரா புஞ்சையை ஒரு ஏகரா நஞ்சைக்கு ஈடாக வைத்துக் கொண்டு எல்லா கணக்கையும் நஞ்சை வாரியாகவே தயாரிக்கலாம்). ஜனங்கள் கொடுக்கும் தங்கள் நில விவரங்களை சர்கார் கிராம 10வது கணக்கை வைத்துக் கொண்டு திருத்திக்கொள்ளலாம். ஆனால் அநேக பட்டாக்கள் கூட்டாக இருப்பதாலும், ஒவ்வொரு பட்டாதாருடைய பங்கும் சரிவர தெரியாததாலும், இது முற்றிலும் சாத்தியமாகாது.

கிராமத்தின் ஒவ்வொரு வகுப்பு, ஒவ்வொரு குடும்பம் ஒவ்வொரு ஜாதியின் தனி சராசரி கணக்கை சரியாக கவனித்தால் அந்தக் கிராமத்தின் பொருளாதார நிலமை தெரியவரும்.

விவரம் சேகரிப்பவர்கள் இன்னும் அநேக விஷயங்களைக் குறித்து விவரங்களை தீவிரமாக விசாரித்து சேகரிக்க வேண்டும். கீழே உதாரணமாக விசாரிக்கவேண்டிய பல விஷயங்களின் ஜாப்தா கொடுக்கப்பட்டிருக்கிறது.

முதல் பாகம்.

கிராம ரிஜிஸ்டரிலிருந்து பெரும்பாலும் எடுக்கவேண்டிய விவரங்கள்.

ஜனத்தொகை —ஆண், பெண், 18 வயதிற்குட்பட்ட சிறுவர்கள். சராசரி ஜனன சங்கை. 16 வயதிற்குட்பட்ட சிறுமிகள். சராசரி மரண சங்கை,

குடியிருக்கும் வீடுகள்—ஓட்டு வீடுகள்—கூறை வீடுகள்—மாடி வீடுகள்.

ஏர்கள் கால் நடைகள்—எருதுகள்—பசுக்கள்—சிறிய கால் நடைகள்.

எருமைகள்—பால் கறக்கும் எருமைகள்—எருமைக் கன்றுக்குட்டிகள்—செம்மறி ஆடு—வெள்ளாடு.

வண்டிகள்,

கடன்கள்.

நிலங்கள்—நஞ்சை—(சுவர்மெண்டும் இனாமும்)

புஞ்சை (சுவர்மெண்டும் இனாமும்.)

மாமூல் ஜலவசதி—கால்வாய் மூலம்—ஏரிகள் மூலம்—கிணறுகள் மூலம்.

சராசரி வருஷ தீர்வை, சராசரி ஜல தீர்வை, சராசரி வரிவஜா, ஜலவசதி விவரமும் எண்ணிக்கையும், ரிப்பேர் செய்யப்படும் கிணறுகளின் எண்ணிக்கை,

குடி தண்ணீர் கிணறுகள், குளங்களின் எண்ணிக்கை, மற்ற வீட்டு உபயோகத்திற்காக இருக்கும் கிணறுகளின் எண்ணிக்கை, கவர்மெண்டு மரங்கள், மேய்ச்சல் நில விஸ்தீரணம், விறகு மரம் இவைகளுக்காக இருக்கும் பொது நிலங்கள், பொது காரியங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் நிலங்கள், தாழ்த்தப்பட்டவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் நில விஸ்தீரணம் சராசரி மழை அளவு, (சமீபத்திலிருக்கும் மழை கணக்கு குறிக்கும் ஆபீசிலிருந்து), முக்கிய தானியங்கள் பயிராகும் சராசரி நில விஸ்தீரணம்.

நஞ்சை—(1) நெல், (2) கேவரு, (3) (4)

புஞ்சை—(1) சஜ்ஜா, (2) ஜொன்ன, (3) கொள்ளு (4)

பருப்புகள்—(1) துவரை, (2) மற்றவைகள்.

மாட்டுத்தீனிகள்—(1) ஜனுமு, (2) மற்றவைகள்.

வியாபாரப் பயிர்கள்—(1) கடலே, (2) மிளகாய், (3) வெங்காயம், (4) புகையிலே, (5) என்ளு, (6) மஞ்சள், (7) பருத்தி.

காய்கறிகள்—பழங்கள்—(1) மாம்பழம், (2) ஆரஞ்சு, (3)

(இந்த பாகத்தில் சராசரி கணக்கு எந்த காலம் வரையில் எடுக்கப்பட்டது, எவ்வளவு பிழைகள் இருக்கலாம் என்பதையும் குறிப்பிடவேண்டும்.)

இரண்டாம் பாகம்—சமூக நிலமை.

1. பிரதான ஜாதிகளும், எண்ணிக்கையும், நிலமையும்; தாழ்த்தப்பட்டவர்கள் நிலமை, வெளிநாடுகளுக்கு வெளியேறுதல்; அதன் எண்ணிக்கை, காரணங்களும்.

2. கோவில்களும், ஸ்தாபனங்களும், சந்தைகள், திருவிழாக்கள், பஜனைகள்.

3. குறிப்பிட வேண்டிய சமூக மத பழக்கவழக்கங்கள். பாகப்பிரிவினை ஏற்பட்டிருக்கிறதா என்பது, அதனால் ஏகருடும்பத்தில் ஏற்படும் மாறுதல்கள், எளிய பந்துக்களும் திக்கற்றவர்களும்—எப்படி காப்பாற்றப்படுகிறார்கள்—மூட நம்பிக்கை வழக்கங்கள்.

4. சங்கங்கள்—தனி, சமூக, மத சம்பந்தமான சண்டைகள், அவைகளின் காரணங்கள்—பஞ்சாயத்து போர்டுகளும், கோர்ட்டுகளும்—உஷார் கமிடிகள்—ஐக்கிய சங்கங்கள்—குடியானவர்கள் சங்கங்கள்—தேர்தல்களுக்கு ஓட்டு சேகரித்தல்—ஜாதிபேதம்—பஞ்சாயத்துகள்—மத, மற்ற விஷயங்களுக்காக பொது நிதி.

5. கல்வி—பள்ளிக்கூடங்கள்—படிப்பவர்களின் எண்ணிக்கை, ஆண், பெண்—பள்ளிக்கூடத்திற்கு வருவது—போதிக்கப்படும் திறமை—ஒவ்வொரு ஜாதியினரிடம் காணப்படும் வித்தியாசம்—பெண் கல்வி—மத்தியதரக்கல்வி, மத்தியதர பள்ளிக்கூடம், ஹைஸ்கூல், காலேஜ் இவைகளுக்கு அனுப்பப்படும் பையன்கள்—வயது வந்தவர்கள் எழுதபடிக்க அப்பியாசம்—வயது வந்தவர்கள் கல்வி.

6. போக்கு வரத்து—ரயில்—பஸ்—சல்போய்ட ரஸ்தாக்கள்—வண்டிப்பாதைகள்—கிராம தெருவுகள்—ஆக்கிரமிப்புகள்—முக்கிய இடங்களுக்கும் போகு தூரம் (முக்கியமாக மார்க்கெட்டுகளுக்கு).

7. பொது ஆரோக்கியம், சுகாதாரம்—வெயில்காலத்திலும், மழைகாலத்திலும் ஜல வசதி,—மல ஜலங்களை அப்புறப்படுத்த ஏற்பாடு,—சாக்கடைகள்—

கக்கூசுகள்—வியாதிகளும் நோய்களும் (முக்கியமாக காலரா, வைசூரி, மலேரியா, மற்ற ஜுரங்கள், குஷ்டரோகம், கண்வியாதிகள், க்ஷய ரோகம், ப்ளேக், முதலிய வைகளை குறிப்பாக கவனிக்கவேண்டியது). ஆஸ்பத்திரிகள்—சமீப ஆஸ்பத்திரியின் தூரம்—வைத்தியர்கள்—மருந்தவச்சிகள்—சிசுமரணம்—கர்ப்ப ஸ்திரீகளின் கவனிப்பும் பிரசவித்த ஸ்திரீகளின் பாதுகாப்பும்—ஆண், பெண் இறக்கும் சராசரி வயது—ஜனங்களின் தேக நிலமை—ஆண், பெண்களின் சராசரி உயரம்—ஆகாரத்தின் சுத்தம்—கலப்பு.

8. ஒழிவு நேரங்களை கழிப்பது—வயது வந்தவர்கள், சிறியவர்களுக்கு ஆட்டங்கள்—பத்திரிகைகளும், புஸ்தகங்களும்,—கதைசொல்லுதல்—பாட்டு ஒப்பிப்பது—தெருக்கூத்து—சங்கீதம்—குடிவழக்கம்.

9. வேலை செய்யும் விவரமும், நேரமும்—குடியானவர்கள்—வயலில் வேலை செய்பவர்கள்—வீட்டு வேலையாட்கள்—பெண்கள்—குழந்தைகள்—ஆளேகள்—அடிமைத்தனத்தை யொத்த நிலமை.

10. வாழ்க்கையின் நிலமை—வீடுகள்; அவைகளின் அளவு, மதிப்பு, செலவு செய்யப்பட்டதுகை, இருக்கும் நிலமை (காற்றோட்டம், வெளிச்சம், சுத்தம், ஒரு அறைக்கு இருக்கும் நபர்கள்)—ஆகாரம், ஜாதி, வகுப்பு இவைகளுக்குள்ள பேதம்; அளவும் தரமும்; சமையல் சாமான்கள், நெய், பால், சர்க்கரை, பழங்கள், காய்கறிகள், இலைகளின் உபயோகம்—துணிமணிகள்; வெவ்வேறு ஜாதி, வகுப்புகளினிடையேயுள்ள வித்தியாசங்கள்,—கையால் நூற்று நெய்யப்பட்ட துணிகளின் உபயோகம், சலவை செலவு; வருஷச்செலவு—மரசாமான்கள், வீட்டுப்பாத்திரங்கள், வீடுகளுக்கும் தெருக்களுக்கும் விளக்குவைத்தல்.

11. வருமானமும், செலவும்—அதிகப்படி, கீழ்த்தரமான, சராசரி வருமானம்—வெவ்வேறு ஜாதி வகுப்புகளினிடையே வித்தியாசம்—ஜனத்துகையின் நெருக்கடியினால் நில விஸ்தீரணம் பாதிக்கப்படுவது, கடன்—லேவாதேவி—வட்டி விகிதம்—கடனுக்கு பொறுப்பு—கடன்களின் கால நீடிப்பு—வசூலிக்கப்படும் விதம்—தான்யங்கள் கடன்கள்—நிலகுடக்கூலி—மிச்சப்படுவது.

(இந்த பாகத்தை வீடு வீடாக விசாரித்து தெரிந்து பதிவுசெய்து கொள்ள வேண்டும்.)

மூன்றும் பாகம்—தொழில்கள் சம்பந்தமான குறிப்பு.

A. விவசாயம்.

(a) பூமி—பொதுதரம், விஸ்தரிப்பு—செழிப்பு—விற்பனை மதிப்பு

(b) எடுத்துக்கொள்ளவேண்டிய நிலங்கள்—விஸ்தீரணமும், தரமும்—பயிர்செய்யமுடியாத நிலங்கள்—

(c) நீர்பாசனம்—கால்வாய்கள், ஏரிகள், கிணறுகள், இவைகளின் எண்ணிக்கை, என்னவகைப்பட்டது என்பதும்—

சீர்திருத்த கவர்மெண்டு கொடுக்கும் தொகை—குடிமராமத்து—சீர் செய்ய வேண்டிய குறைகள்—ஜலவிநியோகம்—முறை, குறைகள்—நீர்பாசன பஞ்சாயத்துகள்—ஏற்பட்டிருக்கிறதா, அல்லது சாத்தியமா—கிணறு வெட்ட கடன்கள்.

(d) காலாகால மழை—விவசாய அமுலின் குறிப்பு—பஞ்சம்.

(e) பிரதான பயிர்கள்—ஆகார பயிர்கள்—வியாபார பயிர்கள்—மாட்டுத் தீனி பயிர்கள்—எவ்வளவு தேவை, விற்பனை எவ்வளவு—விலைகளின் போக்கு—பூச்சிகள்—புதிய பயிர் தினுசுகளும் அவை நன்றாக வந்த விவரமும்.

(f) விவசாய முறைகளும், சாமான்களும்—ஏர் உழுவது—விதைப்பதும், விதையும்—எருவுபோடுவது—களை எடுப்பது—ஜலம் பாய்ச்சுவது—அறுவடை சீர்திருத்தங்கள் செய்வது—விவசாய இலாகாவின் வேலை.

(g) விவசாய செல்வநிலை—செலவுகள், முக்கியமாக பணம் அவசரமாகத் தேவையாக இருக்கும் காலங்களைக்குறித்து—கடன்கள்—வட்டி—திருப்பிக்கொடுத்தல்—நிகரவசூலும் லாபமும்—நிலம் வாங்குவதும், நிலத்தில் போட்டதுகை மீது வருமானமும்—அடமானம்—ஐக்கிய கடன், நில அடமான சங்கங்கள்—கோவாபரேடிவ் இலாகாவின் வேலை.

(h) விவசாய விற்பனை மார்கெட்டுகள்—வியாபாரிகள்—முறைகள்—போக்குவரத்து—தரகர்கள் லாபம்—மொத்த, சில்லரை வியாபார ஸ்தலங்கள். கடன், விற்பனை சொஸைடிகள்.

(i) நிலம்—சராசரி அளவு—முக்கியமாக சிறியதும், பெரியதும்—துண்டாக்கப்படுதல்—அதன்காரணங்கள்—சராசரி தீர்வையும், வருமானமும்—விஸ்தீர்ணத்தையும், தீர்வையும் உத்தேசித்து வகுப்பாகப் பிரித்தல்—சொந்தக்காரர்களின் எண்ணிக்கை—குடிகளின் எண்ணிக்கை—வயல் வேலைக்காரர்களின் எண்ணிக்கை—ஊரில் இல்லாதிருக்கும் நிலச்சொந்தக்காரர்கள்.

B. நெய்வது.

நெய்பவர்கள் எண்ணிக்கை—தறிகள் எண்ணிக்கை—அண்டியிருப்பவர்கள் செய்யும் தொழில்—முதல்—கடன் வாங்குதல்—தறியின் தினுசு—வேலை செய்யும் சௌகர்யங்களும், நேரமும்—செய்யப்படுவதின் அளவு—சாமான்கள் வாங்குவதும் தயார்செய்வதும்—செய்தவஸ்துவின் விற்பனை—நெய்பவனுக்குக் கிடைக்கும் நிகர லாபம்—சராசரி வருமானம்—நெசவாளர் கோவாபரேடிவ் சங்கங்கள்.

C. கைத்தொழில் செய்பவர்கள்.

குசவன்—தச்சன்—கருமான்—வண்ணான்—தட்டான் முதலானவர்கள்—ஆயுதங்களும் வேலை செய்யும் விதமும்—சாமான்கள் வாங்குதல்—வருமானத்தின் விதமும் அளவும்—இனும்கள்—மதிப்பு—பாரதீனம் செய்தல்.

D. மற்ற தொழில்கள்.

கொல்லத்துக்காரன்,—வீடு கட்டுவதுபற்றியும், கூறைபோடுவது பற்றியும், குறிப்பு—பிரம்பு வேலை—கூடைபோடுதல்—தையல்வேலை—மீன் பிடிப்பது.

E. வியாபாரிகளும் கடைக்காரர்களும்.

வியாபாரத்தின் விவரம்—மிகவும் தேவையிருக்கும் சாமான்கள்—பொதுஜன விருப்பத்தில் மாறுதல்கள்—லாபம்—குமாஸ்தாக்கள், கூலியாட்கள் வேலைக்கு வைத்துக்கொள்ளுவது.

F. அடுத்தபடியான தொழில்கள்.

வாத்து, பக்ஷி வளர்ப்பது—தேனீ வளர்ப்பது—சில்லரை காட்டு உற்பத்தி சாமான்களை சேகரிப்பது—ஊசி வேலை—சித்திரங்கள் கைச்சாமான்கள்.

நான்காம் பாகம்—கால்நடைகளைக் குறித்து விவரம்.

1. கால் நடைகள் வாங்குவது—வியாபாரிகள்—பணம் கொடுக்கும் விதம்—கால் நடைகளின் தினுசுகள்.

2. கால் நடைகளை வளர்ப்பது—எருது தினுசுகள்—சினைக்கு பசுவைப் பொறுக்குவது—கன்றுகளை காப்பாற்றுவது.

3. கால் நடைகள் ஆகாரம்—மேய்ச்சல் நிலங்கள்—வைக்கோல்—கடைகள் வியாதிகள்—வைத்திய வசதி—கால்நடை இலாகாவின் வேலை.

4. எருவு சேகரிப்பது—வீட்டுக்கு விறகு முதலியவைகளுக்கு உபயோகம்—வயல்களில் கடா மடக்குவது, எருவு குழிகள்—விவசாய இலாகாவின் வேலை.

5. உற்பத்திகள்—பசுக்கள், எருமைகள், ஆடுகள் கொடுக்கும் பால்—பால் விற்பனை—தோல்கள்—எலும்புகள்—கொம்பு—குளம்பு—செத்த பிராணிகள்.

ஐந்தாம் பாகம்—மரம், செடி, கொடி பயிர் செய்தல்.

1. காடுகளும், காடுகள் அல்லாத நிலமும்—விலை உயர்ந்த மரங்களும், செடிகளும், அதன் உபயோகங்கள்—மேய்ப்பது—விறகு—மரத்தின் உபயோகம்.

2. வெட்டுவதும், காப்பாற்றுவதும்—எரித்தல்—திருட்டுதனமாக வெட்டுவது—கட்டுப்பாடுகள்—காட்டு இலாகா வேலை—குடிகளின் மனப்பான்மை—காட்டு பஞ்சாயத்துகள்—ஆடுகளின் எண்ணிக்கை அதிகமும், குறைவும்.

3. பயிர் செய்வது—பழைய தோப்புகளின் கதி—புது தோப்புகள் பயிர் செய்வது—காட்டு வளர்ப்பை அதிகப்படுத்துவது—எருவுக்கு தழை வளர்ப்பது.

வர்த்தமானங்களும், குறிப்புகளும்.

தேனீக்களும், பழங்கள் விருத்தியும்.

தோட்டங்களில் தேன் கூடு வைத்து தேனீ வளர்ப்பதால், இரண்டு வித பிரயோஜனம் உண்டு. வருஷத்தில் ஒவ்வொரு கூட்டிலிருந்தும் 8, 10 பவுண்டு தேன் கிடைப்பதுடன் அது மரங்களை செழிப்பாக பழங்கள் கொடுக்கவும் உதவுகின்றது. புஷ்பத்தின் உள் அடிபாகத்திலிருக்கும் மகரந்தப் பொடியானது தேன் குடிக்கப்போகும் ஈயின் உடம்பில் ஒட்டிக்கொள்ளுகிறது. அந்த ஈ இன்னொரு பூவில் தேன் குடிக்க பிரவேசிக்கும்போது அதன்மேல் இருக்கும் அந்த மகரந்தப் பொடியானது அந்த புஷ்பத்தின் காம்புகள் வழியாக உள் ஒரு துவாரத்தில் செல்லுவதால், பழம் உண்டாகிறது. எலுமிச்சம் செடி, கொய்யா, மா, தென்னை முதலிய மரங்கள் இருக்கும் தோட்டங்களில் தேன்கூடு வைத்தால் ஏராளமான பழங்கள் கிடைக்கும். அதோடு நிறைய தேனும் கிடைக்கும்.

* * *

உலர்த்தப்பட்ட பழங்கள்.

முட்டைகளின் பொடியும், பால் பொடி ரூபமாயும் உலகத்தில் உபயோகிக்கப்பட்டு வருகிறது. இப்போது பலவகையான பழங்களிலிருந்தும் வருவல்களும், பொடியும் தயார் செய்வது ரொம்ப சாதாரணமாக இருக்கிறது. பதார்த்தங்களிலிருக்கும் ஜலத்தை நீக்கிவிட்டால், எவ்வளவு இடம் மிச்சப்படுகிறது என்பது ஒரு உதாரணத்திலிருந்து நன்கு தெரியும். அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்கு ஒரு வருஷத்தில் ஏற்றுமதி செய்யப்படும் உணவு பொருள்களில் ஜல பதார்த்தம் கொண்டது மாத்திரம் சுமார் 50,000 டன்கள். ஆறு கப்பல்களில் இடம் கொள்ளும், பச்சை காய்களும், பழங்களும் உலர்த்தினால் ஒரு கப்பலில் அடங்கிவிடும். தக்காளி, உருளைக்கிழங்கு, ஆப்பில், வாழைப்பழம் உலர்த்தி உபயோகப்படுத்த தகுதியானவை. இப்படி செய்வதால் இடம் மிச்சம் படுவதோடு அல்லாமல் விலையிலும் 5 இல் 1 பங்கு மிச்சப்படுகிறது. இப்படி செய்தால் கணக்கு எடுக்கவேண்டியது, தரம்வாரியாக பிரிக்கவேண்டியது, பாத்திரங்கள் தேட வேண்டியது, பங்கும் செய்ய வேண்டியது முதலிய பலவித வேலைகள் குறைகின்றன.

* * *

மதராஸ் கடன் நிவாரண மசோதா வேலை செய்த விதம்.

1942ம் வருஷம் மார்ச்சு மாதம் வரையில் முடிவடைந்த 3 மாதங்களுக்கு 22,32,584-1-4 ரூபாய்கள் விஷயமாய் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் தொகை ரூபாய் 10,00,126-10-7 க்கு குறைக்கப்பட்டது. அ. து. 44.79 சத விகிதம் ஆகிறது. 4085 நடவடிக்கைகள் பைசல் செய்யப்பட்டன. தீர்ப்பாகாமல் நிலுவையாயிருக்கும் நடவடிக்கைகள் 3421. சட்டம் அமுலுக்கு வந்த இந்த 49 மாதங்களில், நடவடிக்கைக்கு வந்த தொகை ரூபாய் 7,03,47,611-11-8. இது ரூபாய் 3,74,90,794-15-3க்கு குறைக்கப்பட்டது. அ. து. ரத்து செய்யப்பட்ட தொகை ரூபாய் 3,28,56,816-12-5. அ. து. 46.71 சத விகிதம் ஆகிறது. பைசல்

செய்யப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை 1,77,249. இந்த கணக்கில் கோர்ட்டு அன்னியில் சமாதானம் செய்யப்பட்ட விவகாரங்கள் சேர்க்கப்படவில்லை.

* * *

பம்பாயில் கிராமங்களில் வைத்திய சைதி.

வைத்தியர்களை கிராமங்களில் குடியேற தூண்டுவதற்காக பம்பாய் கவர்மெண்டார் ஷை வைத்தியர்களுக்கு வீடு கட்டுவதற்காக முன் பணம் வட்டி இல்லாமல் கொடுக்க உத்தேசித்திருக்கிறார்கள்.

இந்த தொகை ஒரு வைத்தியருக்கு 1,000 ரூபாய்க்குமேல் கொடுபடமாட்டாது. இது வீடு கட்ட மாத்திரம் உபயோகப்படுத்த வேண்டும். வைத்தியர்களுக்கு கொடுக்கும் கிராண்டிலிருந்து இந்த தொகையை காலதவணையாக திருப்பி வசூல் செய்யப்படுகிறது.

* * *

மைசூரில் குடிசைத் தொழில்கள்.

தொழில் சாலை வேலையையும் குடிசைக்கைத்தொழிலையும் ஒற்றுமையுடன் உழைக்க, குடிசைக்கைத்தொழில் கமிட்டியானது மில் சொந்தக்காரர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறது. அதாவது என்ன வகையில் தொழில சாலையில் உற்பத்தியாகாத சாமான்களை குடிசைக்கைத்தொழில் மூலமாக பூர்த்திசெய்துக் கொள்ளலாம் என்றும் அதற்காக என்ன விதத்தில் குடிசைக்கைத்தொழிலுக்குச் சகாயம் செய்யலாம் என்றும் ஆராய்ச்சி செய்யும்படி வேண்டிக்கொண்டிருக்கிறது.

* * *

நம்தேசத்தில் பயிராகும் பருத்தியின் அளவு.

பருத்தியானது நமக்கு நல்ல லாபத்தைக் கொடுக்கும் பொருள் என்று சொல்லலாம். பருத்தி விளையும் நாடுகளில் நம்தேசம் இரண்டாவதாக இருக்கிறது. சராசரி 7,000,000 லக்ஷம் பேல்கள் வருஷத்தில் விளைகின்றன.

இதில் பாதி ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதன் மதிப்பு 24 கோடி 99 லக்ஷம் முதல் 31 கோடி 4 லக்ஷம் ரூபாய் வரையில் ஆகிறது.

சாத்தனபள்ளி தாலூகா பஞ்சாயத்து கமிட்டியின் தீர்மானங்கள்.

சாத்தனபள்ளி தாலூகா பஞ்சாயத்து கமிட்டியானது (2-5-42) அன்று காங்கிரஸ் ஆபீசில் கூடி கீழ்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றியது. கமிட்டியின் காரியதரிசி, ஸ்ரீ தர்லா வெங்கடேஸ்வர ராவ் அக்கிராசனம் வகித்தார்.

பத்திரிகைகள்.

இந்த கமிட்டியானது, பஞ்சாயத்துகளுக்கு தினசரி பத்திரிகைகளை தருவிக்க அதிகாரம் கொடுத்திருந்த கவர்மெண்ட் உத்திரவு ஜி. ஓ. நெம்பர் 472 (கல்வி பொது சுகாதார இலாகா) ரத்து செய்யப்பட்டதானது தவறு என்றும், மாகாண கவர்மெண்டை இந்த நெருக்கடி காலங்களில், ஜப்பானின் படையெடுப்பு அபாயம் அதிகமாயிருப்பதால் ஜனங்கள் பொய் சமாசார பிரசுரங்களால் பீதியடைந்து போவதாலும், ஜனங்களின் நன்மையையே கோரும் பஞ்சாயத்துகள் ஜனங்களை தைரியப்படுத்தி சரியான விவரங்களை ஜனங்களுக்குத் தெரிவிக்கவேண்டி யிருப்பதாலும், அப்படி செய்வது தினசரி பத்திரிகைகளை தருவிக்க அனுமதி கொடுக்கா விட்டால் சாத்தியமில்லை யாதலாலும், பஞ்சாயத்துகளுக்கு தினசரி பத்திரிகைகளை தருவிக்க அனுமதி கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறது.

வைத்திய வசதி.

கிராமங்களில் ஸ்தாபிக்கப்படும் பாதுகாப்பு கமிட்டிகளுக்கும், அமைதி ஸ்தாபனங்களுக்கும் விமான குண்டு பாதுகாப்பு சம்பந்தமாக பிரதம சிகிச்சைக்கு தேவையாயிருக்கும் சாமான்களை வாங்க 25 ரூபாய் வரையில் செலவு செய்ய அனுமதிக்கும்படி மாகாண கவர்மெண்டை இந்த கமிட்டியானது வேண்டிக்கொள்ளுகிறது.

கால்நடை வைத்திய ஸ்தாபனங்கள்.

ஊரூராய் போகும் கால் நடை வைத்திய சகாயமானது பல காரணங்களால் அதிக பலன்தர முடியவில்லை. ஆகையால் கால்நடைகளுக்கு கிராமங்களில் நோய் கண்டால் உடனே சிகிச்சை செய்ய சாத்தியப்படுவதில்லை. தலைமை ஆபீசுக்குப் போகவேண்டி யிருக்கிறது. ஆகையால் உடனே ஒரு தாலூகா கால்நடை வைத்திய சாலையை ஏற்படுத்தும்படி இந்த கமிட்டி வேண்டிக்கொள்ளுகிறது.

டொங்காக்கள்—செலவுக்குப் பணம்.

கிராம மனைகளில் இருக்கும் டொங்காக்களுக்கு ரிப்பேர் செய்யவேண்டி, பணத்திற்கு பஞ்சாயத்துகள் செய்துக்கொள்ளும் மனு, 6 மாதமில்லாமல் உத்திரவாவதில்லை. ஆகையால் அவசர வேலைகள் தடைப்படும் போகின்றன. ஆகையால் இந்த டொங்காக்கள் பாராமரிப்பை பஞ்சாயத்துகளிடமே ஒப்படைக்கும்படி இந்த கமிட்டி சென்னை கவர்மெண்டை கேட்டுக்கொள்ளுகிறது.

சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன்.

1942ம் ஹு மார்சு மாதம் 31-ம் தேதி வரையில் வரவு செலவு கணக்கு.

செலவு.		ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.
பத்திரிகை கணக்கு							
ஊதியம்	...	621	0	0			
காகித அச்சு கூலி	...	948	13	11			
					1,569	13	11
தபால் தந்தி	...				624	15	3
வாடகை	...				360	0	0
சிப்பந்திகள்	...				289	8	0
பிரயாண செலவு	...				217	12	0
காகிதம் வகையரு	...				164	7	9
டெலிபோன்	...				120	0	0
சில்லரை செலவு	...				59	9	9
பிரசாரம்	...				79	0	0
ஆடிட் கட்டணம்	...				40	0	0
பத்திரிகைகளுக்கு சந்தா	...				11	0	0
பாங்கி கட்டணம்	...				3	8	0
10 சத விகிதம் சாமான்கள் தேய்வு	...				35	0	3
செலவுக்கு மேல் கிடைத்த வரவு.					125	6	7
மொத்தம்	...				3,700	1	6

வரவு.		ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.
சந்தா	..				3,200	0	0
விளம்பர வருமானம்	...				441	0	0
டிவிடெண்டு	...				33	11	6
செகியூரிடி வட்டி	...				25	6	0
					3,700	1	6

பரிசீலனை செய்து சரியென சொல்லப்பட்டது.

மதராஸ்,
16 ஜுலை 1942.

கர்ரா அண்டு கம்பனி,
கணக்கு பரிசோதகர்கள்.

சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன்.

1942-ம் ௵ மார்சுமீ 31௳ வரையில் முடிந்த வருஷ வரவு செலவு கணக்கு.

வரவு.

	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை
கையிருப்பு.						
ரொக்கம் ...	16	13	2			
ம. பொ. கோ. பாங்கில் கரண்டு கணக்கில் ...	4	1	2			
ஷை யில் ப்ருடென்ஷியல் கணக்கில் ...	1,042	8	0	1,063	6	4
பத்திரிகை சந்தா.						
நடந்த வருஷம் ...	2,044	7	0			
பாக்கி ...	1,516	0	0	3,560	7	0
முன்னதாக் செலுத்தின சந்தா ...				10	0	0
விளம்பர வருமானம் ...				441	0	0
டிவிடெண்டுகள் ...				33	11	6
செக்யூரிடி வட்டி ...				25	6	0
டெலிபோன் வருமானம் ...				16	0	0
மொத்தம் ...				5,149	14	10

செலவு.

	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.
பத்திரிகைக்கு.						
ஊதியம் ...	621	0	0			
அச்சு காகிதம் ...	948	13	0	1,569	13	11
தபால் ...				624	15	3
சிப்பந்திகள் ...				289	8	0
பிரயாண செலவு ...				217	12	0
வாடகை ...				360	0	0
பேனா, காகிதம் வகையரா ...				164	7	9
கொடுக்கவேண்டியவை ...				329	0	8
பிரசாரம் ...				79	0	0
சில்லரை செலவு ...				59	9	9
சந்தா ...				11	0	0
டெலிபோன் ...				136	0	0
பாங்கு தண்டல் ...				3	8	0
கடைசி இருப்பு.						
பணமாக மாத்தவேண்டிய தபால் ஆர்டர்கள் ...	112	8	0			
ரொக்கம் ...	36	14	2			
ம. பொ. பாங்கு கரண்டு கணக்கு... தலைமை ஆபீஸ்	78	3	0			
ஷை திருவல்லிக்கேணி ...	49	9	4			
ப்ருடென்ஷியல் டெபாசிட் ...	1,013	1	0	1,305	3	6
மொத்தம் ...				5,149	14	10

மதராஸ்,
16 ஜூலை 1942.

பரிசீலனை செய்து சரியென ஒப்புகொள்ளப்பட்டது.
கே. தக்ஷிணாமூர்த்தி.

சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன்.

1941-42ம் வருஷத்திய 1942ம் ஞு மார்ச்மீ 31உ வரை ஐவேஜி இருப்பு ஜாப்தா.

	ரூ. அ. பை.	ரூ. அ. பை.
சென்ற கணக்குபடி மகாநாடு மிச்சம் கணக்கு ...		3,767 11 4
கொடுக்கவேண்டிய சில்லரை கடன்கள் ..		40 0 0
முன்னதாக செலுத்தின சந்தா ...		10 0 0
வருமானம் செலவு கணக்கு சென்ற வருஷத்திய ஜாப்தாபடி ...	500 9 7	
இந்த வருஷத்திய மிச்சம் ...	125 6 7	
		626 0 2
மொத்தம் ...		4,443 11 6

	ரூ. அ. பை.	ரூ. அ. பை.
மர சாமான்கள் சென்ற வருஷ கணக்குபடி ...	355 0 3	
தேய்வு ...	35 0 3	
		320 0 0
வசூல் செய்ய முடியும் கடன்காரர்கள் ...	1,985 8 0	
சந்தேகமான கடன்கள் ..	832 0 0	
		2,817 8 0
சி. சி. பியில் ஷேர் ...		1 0 0
ரொக்கமும் மற்ற இருப்பும்		
தபால் ஆர்டர்கள் ...	122 8 0	
ரொக்கம் ...	36 14 2	
தலைமை கோவாபரேடிவ் பாங்கி (கரண்டு கணக்கு) ...	78 3 0	
டை கணக்கு திருவல்லிக்கேணி கிளை பாங்கில் ...	49 9 4	
டை ப்ருடென்ஷியல் டெபாசிட்.	1,018 1 0	
		1,205 3 6
மொத்தம் ...		4,443 11 6

மதராஸ்,
16 ஜுலை 1942.

பரிசீலனை செய்து சரியென சொல்லப்பட்டது.

கீரா அண்டு கம்பேனி,
கணக்கு பரிசோதகர்கள்.

மதறாஸ் ப்ரோவின்ஷியல் கோவாபரேடிவ் பாங்க், லிமிடெட்.

(1912 வருடம் II வது ஆக்ட் ஆகிய 1932 வருடம் VI ஆக்டின்கீழ் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.)

தலைமை ஆபீஸ்.

சைனு பஜார் ரோட், மதராஸ். போன் நெ. 2390

மைலாப்பூர் பிராஞ்சு :

லஸ் சர்ச் ரோட், மைலாப்பூர், போன் நெ. 3334.

எழும்பூர் பிராஞ்சு:

ஹிப்ராஹிம் காலனி, எழும்பூர், போன் நெ. 8510.

சைதாபேட்டை பிராஞ்சு :

38, காரிணீஸ்வரர் கோயில் தெருவு, சைதாப்பேட்டை.

பிரசிடேண்டு :

மிஸ்டர் டி. எ. ராமலிங்கம் செட்டியார், பி.எ., பி.எல்., எம்.எல்.சி.

ஸெக்ரடேரி :

டி. ராகவேந்திர ராவ்.

இந்த நாட்டிலிருக்கும் விவசாயிகளுக்கு பொருப்பு சம்பாதித்துக் கொடுப்பதில் இந்த பாங்கு முக்கிய ஸ்தாபனமாகும்.

இந்த பாங்கு மதறாஸ் கார்பரேஷனுக்கும், மதறாஸ் யூனிவர்ஸிடி, அண்ணாமலை, ஆந்திரா யூனிவர்ஸிடிகளுக்கும், மற்ற லோகல் போர்டுகள், டிஸ்டிரிக்ட் முனிசிப்பாலிடிகளுக்கும் பாங்காக இருக்கின்றது.

விதிகள், வியாபார நிபந்தனைக்கும் கீழ்கண்டவருக்கு எழுதவும் :

ஸெக்ரடேரி,
தலைமை ஆபீஸ்
அல்லது
பிராஞ்சுகள்.

வெளியிட்டவர், பிரசுரகர்த்தா, மிஸ்டர். வி. வெய்யன்னு, பி.எ., பி.எல்., 187, ராயப்பேட்டை ஹைரோட், ராயப்பேட்டை, மதராஸ்.

மதறாஸ் மவுண்ட் ரோட் நெ. 1/17 ல் அமைத்திருக்கும் சென்ட்ரல் கோவாபரேடிவ் அச்சுக்கூடத்தில் மிஸ்டர் ஆர். கிருஷ்ணமாச்சாரி, பி. ஏ., அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

வெளத் இந்தியா கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஸொஸைடி, லிமிடெட், மதருஸ்.

ஸ்ரீ பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா, எம். எல். ஏ., (பிரஸிடெண்ட்.)

கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஒன்றே உங்களுக்குக் குறைந்த பிரிமிய விகிதங்களில் மிகுந்த பாதுகாப்பளிப்பதோடு, நல்ல வருஷவாரி லாபத்தொகையும் தாராளமான பாலிஸி நிபந்தனைகளும் மற்றும் உன்னத சலுகைகளும் காட்டவல்லது.

லாபத்தொகை முழுவதும் பாலிஸிதார்களையே அடைகிறது. இந்த ஸொஸைடி அவர்களுக்கே சொந்தம், அவர்களுக்காகவே இருக்கிறது—அவர்களாலேயே நடத்தப்பெறுகிறது.

மிகச்சிக்கனமாக காரியாதிகள் நடத்தப்பட்டு, அரசாங்கத்தாரின் நேரான கண்காணிப்பில் பலமான க்ஷேமநிதி முதலியன ஏற்படுத்திக்கொண்டிருப்பதால் அதிக க்ஷேமகரமாக உள்ளது.

பாலிஸி தொகை	—	**1,30,00,000.**
க்ஷேமநிதி	—	**10,00,000.**

உங்களுக்குத் தக்க பாலிஸி விபரத்திற்கு எழுதுங்கள்.

வி. வெங்கடாசலம், எம். ஏ., பி. எல்.,
காரியதரிசி.